


# முக்கிய பாதுகாப்பான திரும்பப் பெறுதல் அறிவிப்பு

## ஆப்பிள் வாட்ச் + பவர் பேங்குக்கான 10K, BPD005 Belkin BoostCharge Pro ஃபாஸ்ட் வயர்லஸ் சார்ஜர் தயாரிப்பை தாமாக திரும்பப் பெறுதல்

---

ஆப்பிள் வாட்ச் + பவர் பேங்குக்கான 10K, BPD005 Belkin BoostCharge Pro ஃபாஸ்ட் வயர்லஸ் சார்ஜர் அனைத்தையும் பெல்கின் தாமாக திரும்பப்பெறத் துவங்கியுள்ளது. அதனை வாங்கிய அனைவருக்கும் அவர்களது பணத்தினை முழுமையாகத் திரும்ப அளிக்கிறது.

சில சூழ்நிலைகளில் ஒரு உற்பத்திக் குறைபாடானது, கையில் எடுத்துச் செல்லக்கூடிய வயர்லெஸ் பேட்டரி சார்ஜரின் லித்தியம் பேட்டரி கூறானது அதிக அளவில் வெப்பமடைவதற்கு வழிவகுக்கலாம். இது நுகர்வோருக்கு தீப்பற்றும் ஆபத்தினை உருவாக்கலாம்.

இந்தத் திரும்பப் பெறுதலினால், காயங்கள் எதுவும் பதிவாகவில்லை. வேறு எந்த பெல்கின் வயர்லெஸ் சார்ஜர்களோ அல்லது வேறு எந்த பெல்கின் தயாரிப்புகளோ பாதிக்கப்படவில்லை.

ஆப்பிள் வாட்ச் + பவர் பேங்க் 10K, BPD005-க்கான Belkin BoostCharge Pro ஃபாஸ்ட் வயர்லெஸ் சார்ஜரை நீங்கள் வாங்கியிருந்தால், நீங்கள் அதைப் பயன்படுத்துவதை நிறுத்துவது முக்கியமாகும். எந்தவொரு மின்வழங்கல் அல்லது மற்ற தயாரிப்புகளிலிருந்தும் அதனை துண்டித்துவிட்டு, கூடுதல் அறிவுறுத்தங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும். உங்கள் BPD005-ஐ, தீப்பிடிக்கக்கூடிய பொருள் எதனிடமிருந்தும் அல்லது பவர் பேங்கை சேதப்படுத்தக்கூடிய பொருள் எதனிடமிருந்தும் தள்ளி, ஒரு பாதுகாப்பான உலர்வான இடத்தில் வைக்கவும். **உங்கள் பவர் பேங்கை எந்தவொரு குப்பை அல்லது மறுசுழற்சி தொட்டியிலும் போட வேண்டாம்**.

- இந்தத் தயாரிப்பினை எவ்வாறு கண்டுபிடித்து, பாதுகாப்பாக அகற்றுவது, மற்றும் பணத்தை எவ்வாறு திரும்பப் பெறுவது என்பது குறித்த முழு விவரங்களுக்கு, https://www.belkin.com/bpd005recallform வலைதளத்தைப் பார்க்கவும்.

- இந்தத் திரும்பப்பெறுதல் குறித்தோ அல்லது இந்தத் தயாரிப்பைப் பற்றியுமோ உங்களுக்கு மேலும் ஏதேனும் சந்தேகம் இருந்தால், எங்கள் வாடிக்கையாளர் சேவை பிரதிநிதியை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். உங்கள் பிராந்தியத்திற்கான உள்ளூர் தொடர்பு தொலைபேசி எண்ணை இங்கே காணலாம்: https://www.belkin.com/support-article?articleNum=55022.